**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்**

# RLTOP. No.2/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.S.சரவணன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 10.11.2022**

**பெயர் - பாலசுந்தரம்**

**த/பெ - பெங்கையா**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12:40 A.M**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

5. மனு சொத்தில் எனது குடும்பத்தார் மட்டுமே வாடகைக்கு உள்ளனர் என்றும் வெளி நபர்கள் யாரும் வாடகைக்கு இல்லை என்று கூறினால் சரிதான். இதற்கு முன்பு அந்த சொத்தில் வேறு மூன்றாம் நபருக்கு வாடகை விட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரரான எனது மகனுக்கு எந்த மாதத்தில் எந்த தேதியில் எந்த வருடத்தில் நான் மனு சொத்தில் வாடகைக்கு விட்டேன் என்றால் தெரியாது.

6. எதிர்மனுதாரர் எனது மகன் என்றும் அவர் வாடகைதாரர் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கின்றேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது மகனான எதிர்மனுதாரருக்கும் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் என்ற உறவு முறை இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் அதுபோல் உறவு முறை இருந்திருந்தால் வாடகை ஒப்பந்தம் மற்றும் வாடகை ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் வாடகை ஒப்பந்தமோ வாடகை ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எதிர்மனுதாரரான எனது மகன் எங்களுக்கு பணம் கொடுக்கவில்லை என்பதற்காக சாத்தாங்காடு காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். எனது மகன்

பணம் கொடுக்கவில்லை என்பதற்காக ஜீவன்ஆம்சம் வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகனிடம் இருந்து பணம் வாங்குதற்காக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் மனைவிக்கும் எங்களுக்கும் உறவுமுறை சரியில்லை என்றால் சரிதான்.

8. மேற்படி எனது மருமகளுக்கும் எங்களுக்கும் அடிக்கடி பிரச்சனை வரும் என்றால் சரியல்ல இது குறித்து அடிக்கடி காவல் நிலையம் செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனு சொத்திற்கு வருவதற்கு முன்பு பிரச்சனை செய்ததது குறித்து காவல் நிலையம் சென்று வந்தோம் எதிர்மனுதாரர் மனு சொத்திற்கு வந்த பிறகு காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. மனுசொத்திற்கு வரும் மின்சார கட்டணத்தை நான்தான் செலுத்திவருகிறேன் அதற்கு எதிர்மனுதாரர் பணம் கொடுப்பாரா என்றால் இல்லை.

9. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே எழுதப்பட்ட வாடகை ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றும் அதை முறைப்படி பதிவுசெய்யபடவில்லை என்றும் எனவே இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் கூறினால் சரியல்ல. எனக்கு ஏதேனும் பரிகாரம் வேண்டும் எனில் அசல் வழக்கே தாக்கல் செய்யவேண்டும் என்றும் தவறாக இம்மனுவினை தாக்கல் செய்தேன் என்று கூறினால் சரியல்ல. வாடகைதாரர் உரிமையாளர் என்ற ஒப்பந்தம் இல்லாநிலையில் இந்நீதிமனறத்திற்கு இம்மனுவினை விசாரனை மேற்கொள்ள ஆள்வரை இல்லை என்றும் கூறினால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 01:00 P.M**

Sd/-Tmt.V.Vannamalar, M.L, PGDIPR, PGD in Crl. & Fr.SC.
District Munsif, Thiruvottiyur.(FAC), Dated 10.11.2022.